03.02.2026

O.S.No.271/2016

வா.சா.1.திரு.சுப்பிரமணியன், த.பெ.திரு.ராமநாதன்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன் என்றாலும் தாவா சொத்து உள்ள பகுதியில் உள்ள நிலங்கள் அதன் தன்மைகள் எனக்கு நன்கு தெரியும் என்றால் தவறு. இந்த வழக்கின் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஆணையர் வந்தபோது நான் உடன் இருந்தேன் என்றால் ஆமாம். நிலஅளவையின் போது சர்வேயர் உடன் இருந்தாரா என்றால் இருந்தார். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கைக்கு ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆட்சேபனை கொடுக்கப்பட்டுள்ளது. ஆட்சேபனை கொடுக்கப்படவில்லை என்றாலும் ஆட்சேபனை கொடுத்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கையில் பக்கம் 3ல் தாவா சொத்தை நிர்ணயம் செய்யும்போது மேலமடை 2பிட் கிராமத்தில் புல எண்.5ல் சர்வேக்கல் E இருக்கும் இடத்தை மேற்படி வரைபடத்தில் காணப்படும் புள்ளி A, B யை அளந்தும் புள்ளி B யில் இருந்து கல் E இருக்கும் இடத்தை அளந்தும் ஆவணப்படிம சரிப்பாரக்கப்பட்டது. பின்னர் கல் E இடத்தில் இருந்து தாவா சொத்தை அளந்து சரிப்பார்த்து பின்னர் அங்கிருந்து வடக்கில் உள்ள வண்டியூர் கண்மாய்க்கு செல்லும் வாய்க்கால் ஆகியவற்றை அளந்து மேலமடை 2பிட்டில் புல எண்.5/15A, 15B, 15C, 10A, 10C, 10B, 10D1 ஆகியவற்றின் அளவுகளையும் சரிப்பார்த்ததில் சர்வேயர் எனக்கு வழங்கியுள்ள

வரைபடத்தில் பச்சை வண்ணத்தில் உள்ள 5/15C, 5/10C, 5/10D1யில் அளவுகள் சரியாக கிடைக்கவில்லை பின்னர் சிவகங்கை சாலையில் இருந்தும் வண்டியூர் 1பிட் எல்கை கோட்டிற்குள் இருக்கும் புலங்களின் அளவுகளையும் சரிபார்த்து வண்டியூர் 1பிட் கிராமம் மேலமடை 2பிட் கிராமம் ஆகியவற்றிற்கு இடையே உள்ள எல்லை கோடு நிர்ணயம் செய்யப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டுள்ளதில் வண்டியூர் பிட் 1 கிராமத்தில் எந்த சர்வே எண்ணில் இருந்து நீதிமன்ற ஆணையர் அளந்தார் என்றால் சர்வே எண் 7 யில் இருந்தார் அளந்தார். ஆனால் சர்வே கல் கண்டுப்பிடிக்கப்படவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. ஆணையர் அறிக்கையில் சர்வே எண் 7 யில் இருந்து அளந்ததாக குறிப்பிடவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் பக்கம் 3ல் பாரா 3 கடைசியில் புல எண்.5 வரைபடத்தில் C, D என காட்டப்பட்டுள்ள பகுதி சரிப்பார்க்க இயலவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதிமன்ற ஆணையர் முறையாக அளந்து அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இரு தரப்பினர்களும் சர்வேயரை வைத்து தாவா சொத்தை அளந்தோமா என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி எந்த காலத்திலும் வாதியின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி பிரதிவாதி இடங்களுக்கு இடையில் உள்ள எல்கை வண்டியூர்–மேலமடை கிராம எல்கை என்றால் சரிதான். வண்டியூர்–மேலமடை கிராம எல்கைகளுக்கு இடையில் இரண்டு கிராமங்களுக்கும் பாத்தியப்படாத இடங்கள் இல்லை என்றால் சரிதான். வாதி, பிரதிவாதி இடத்தில் தேசிய நெடுஞ்சாலை வகைக்காக என்னுடைய தூண்டதலின்படி நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது

என்றால் சரியல்ல. வாதியின் சொத்திற்கு வழி ஏற்படுத்தவேண்டுமென்பதற்காகவே நிலம் ஆர்ஜிதம் செய்ய ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றாலும் அல்லாது போனால் எங்கள் இடத்திற்கு செல்வதற்கு வழி கிடையாது என்றாலும் சரியல்ல. மீனாட்சி மிசன் மருத்துவமனையில் இருந்து கப்பலூர் வரைக்கும் தேசிய நெடுஞ்சாலைக்கு எந்த ஒரு இடமும் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்று மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் தேசிய நெடுஞ்சாலை துறை தரப்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மீனாட்சி மிசன் மருத்துவமனையில் இருந்து கப்பலூர் வரைக்கும் உள்ளது மாநில நெடுஞ்சாலை என்றால் எனக்கு தெரியாது. எனவே பிராதில் 11 செண்ட் இடம் தேசிய நெடுஞ்சாலையால் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்று வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது பொய்யானது என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் தங்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் தங்களுடைய கட்டிடத்திற்கு பின் பகுதியில் (வடக்கு பகுதியில்) சுமார் 15 அடியே கழிவுகளை வைப்பதற்காக காலியிடமாக வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அந்த பகுதியை தான் பிரதிவாதிகள் ஆக்கிரமித்துள்ளார்கள் என்று நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் காலியிடமாக வைத்துள்ள இடமும் வண்டியூர் எல்கை பகுதிக்கு உட்பட்டுள்ளது என்றால் இல்லை.

எனது கிரைய ஆவணத்தின்படி வண்டியூர் கிராமத்திற்குள் எனது சொத்து வராது என்றால் சரிதான். வண்டியூர் கிராமத்தில் உள்ள பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து சம்மந்தமாக எங்களுக்கு உரிமை உள்ளது போல் இந்த வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் கழிவுகளை கொட்டுவதால் அவற்றை

அகற்ற கேட்டு பரிகாரம் கேட்டுள்ளோம் என்றால் ஆமாம். நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கில் எந்த பரிகாரமும் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.